# மகளிர் வாழ்வில் ஏற்றம் தந்த திராவிட மாடல். 7

1929ல் செங்கல்பட்டில் நடைபெற்ற சுயமரியாதை மாநாட்டில் தந்தை பெரியார் பெண்களுக்கான சொத்துரிமை, சுயமரியாதை திருமணம், கைம்பெண் மறுமண உரிமை என்று கனவுகளோடு விதைத்த பெண் முன்னேற்ற விதையை பேரறிஞர் அண்ணாவும், முத்தமிழ் அறிஞர் கலைஞரும், மரமாக வளர்த்தெடுத்தனர். தற்போது தனது தூரநோக்கு சிந்தனையால் அதை மாபெரும் தோட்டமாக பெண்களுக்கான திட்டங்களின் மூலம் செழுமைப்படுத்திக் கொண்டிருக் கிறார் நம் முதல்வர் மு.க.ஸ்டாலின்.



இந்தியாவில் பல மாநிலங்களில் பெண்கள் பள்ளிக்கூடம் செல்வதே இயலாத காரியமாக இருக்கும் நிலையில், தமிழ்நாட்டுப் பெண் நிஹர் ஷாஜி சூரியனை ஆய்வு செய்ய அனுப்பப்பட்ட ஆதித்யா விண்கலத் திட்டத்தின் இயக்குனராகஇருக்கிறார் என்பதும் அவர் தனது பள்ளிக் கல்வியையும், பொறியியல் கல்வியையும் அரசுப் பள்ளி மற்றும் அரசுக் கல்லூரிகளிலேயே முடித்தவர் என்பதும்தான் திராவிட மாடல் சாதனைக்கான சான்றுகள்.

திராவிட மாடல் பெண்களின் வாழ்வில் ஏற்படுத்திய மகத்தான மாற்றங்களின் பயணத்தை கண் முன் நிறுத்தவதே இக்கட்டுரையின் நோக்கம்.

தோள் சீலைப் போராட்டத்தின் 200வது ஆண்டை நாம் இப்போதுதான் கடந்து வந்தோம். மேட்டுக்குடி வர்க்கத்தால் ஒடுக்கப்பட்டோர் சந்தித்த இன்னல்களைவிட ஒடுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட சமூகப் பெண்கள் சந்தித்த கொடுமைகள்ஏராளம். இன்றைக்கு பெண்கள் பெற்றிருக்கும் ஒவ்வெரும் உரிமையும் இங்கே தானாகக் கிடைத்தது அல்ல. பெரியாரின் நீண்ட, நெடிய போராட்டமும் அவற்றை சட்டமாக்கிய திராவிட மாடல் அரசின் திட்டமுமே பெண்களின் விடுதலையைசாத்தியமாக்கியுள்ளன.



1929ல் சுயமரியாதை மாநாட்டில் கணவனை இழந்த கைம்பெண்களுக்கு மறுமண உரிமை வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டபோது, பெரியாருக்கு எதிராக ஆரிய சக்திகள் அணி திரளத் தொடங்கின. பெரியார் முன் வைக்கும் வாதங்கள் காலம் காலமாக இங்கே கடைபிடிக்கப்படும் சாஸ்திரங்களுக்கு எதிரானது என்று கூச்சலிட்டது அக்கூட்டம்.

தந்தை பெரியாரைப் போலவே பெண்களின் முன்னேற்றம் குறித்து சிந்தித்துக் கொண்டிருந்தார் பாபா சாகேப் அம்பேத்கர். இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு சட்ட அமைச்சராக டாக்டர் அம்பேத்கர் பதவி வகித்தபோது பெரியாரின் கனவுகளை, நனவாக்கும் விதமாக இந்துச் சட்டத்தில் திருத்தம் கொண்டு வரும் முயற்சியில் இறங்குகிறார் டாக்டர் அம்பேத்கர்.

ஆதிக்க சக்திகள் விடுவார்களா ? மிகப்பெரும் போராட்டம் வெடிக்கிறது. காலம் காலமாக இருக்கும் மரபுகளை மாற்ற அனுமதிக்க மாட்டோம் என்று ஆதிக்க சக்திகள் கொடுத்த அழுத்தத்தால் அம்பேத்கரால் அச்சட்டத்தை அப்போது சாத்தியப்படுத்த இயலாமல் போனது. கனத்த இதயத்தோடு அவர் தன் பதவியை ராஜினாமா செய்துவிட்டு வெளியேறினார். அப்போது அவர் சொன்ன வார்த்தைகள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை." இந்தியாவில் வர்க்க பாலின சமத்துவமின்மையை விட்டுவிட்டு, பொருளாதார பிரச்சனைகள் தொடர்பான சட்டங்களை இயற்றுவது என்பது நமது அரசியலமைப்பை கேலிக்கூத்து ஆக்கி, சாணக் குவியல் மீது அரண்மனை கட்டுவது போலாகும்" என்றார்.

ஒரு வேளை இந்த சீர்த்திருத்தங்கள் இப்போது சாத்தியப்படுத்த இயலாமல் போயிருக்கக் கூடும். ஆனால் இந்தியாவில் இருந்து நிச்சயம் ஒரு தலைவர் வருவார் அவர் இவற்றை சாத்தியப்படுத்துவார் என்ற நம்பிக்கை அம்பேத்கருக்கு நிச்சயம் இருந்திருக்கும். அம்பேத்கரின் அந்த நம்பிக்கைகளை சாத்தியப்படுத்திக் காட்டியவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர்.

1929 ல் சுயமரியாதை மாநாட்டில் பெரியார் போட்ட விதையை 1989 ல் தன் ஆட்சி அதிகாரத்தின் மூலமாக செடியாக்கி மரமாக்கி அதன் பலன் தரும் கனிகளை பெண்களுக்கு தந்தவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர். பெண்களுக்கும் சொத்தில் சம உரிமை என்ற சட்டத்தின் மூலம் பெண்களுக்கான பொருளாதார உரிமையை கலைஞர் உறுதிப்படுத்தினார்.



அவர் வழியில் இன்றைய முதலமைச்சர் பெண்களின் கல்வி உரிமை, வழிபாட்டு உரிமை என்று ஒவ்வொன்றையும் உறுதிப்படுத்துகிறார். 2021 ல் தமிழ்நாட்டின் முதலமைச்சராக மாண்புமிகு முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் பதவியேற்றது முதல் பெண்களுக்கான திட்டங்கள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன.

பெண்கள் கட்டணமின்றி பேருந்தில் பயணிக்கலாம் என்ற திட்டத்தால் இறகுகள் முறிக்கப்பட்டதாய் உணர்ந்த பல பெண்கள் சுதந்திரமாய் பறக்கத்தொடங்கினர். மாதம் சுமார் 1000 ரூபாய் வரை இதனால் பெண்களால் சேமிக்க முடிகிறது என்பது அவர்களுக்கு பெரு மகிழ்ச்சி.

12 ம் வகுப்புக்கு மேல் பெண்களை உயர் கல்விக்கு அனுப்புவதில் கிராமப்புற பின்தங்கிய குடும்பங்களில் இருக்கும் சிக்கல்களைப் புரிந்து கொண்ட நம் முதல்வர், புதுமைப் பெண் திட்டத்தைத் தந்தார். அரசுப் பள்ளியில் படித்து அரசுக் கல்லூரியில் சேரும் மாணவிகளுக்கு மாதம் ரூபாய் 1000 கல்வி உரிமைத் தொகை வழங்கியபோது பெண் கல்வியில் தமிழகம் மேலும் பல அடி முன்னோக்கிச் சென்றது.



படிக்க வைப்பதோடு நின்று விடக்கூடாது அவர்கள் வேலைகளுக்குச் செல்ல வேண்டும் என்ற உயரிய நோக்கில் தமிழக முதலமைச்சர் கொண்டு வந்த திட்டம்தான் தோழி விடுதி திட்டம். கிராமப்புறங்களில் இருந்து சென்னைக்கு வேலை தேடி வரும் பெண்கள் எங்கே தங்குவது என்ற அச்சம் பல பெற்றோர்களுக்கும் இருந்தது.

இதனாலேயே பெண் பிள்ளைகளை படிக்க வைத்தாலும் கூட வேலைக்கு அனுப்புவதில் பலபெற்றோர்களுக்குதயக்கம்இருந்தது. இதோ நம் முதல்வர் தந்த முத்தான திட்டம் தோழி




விடுதி..மிக மிக குறைவாக கட்டணத்தில் அரசின் மேற்பார்வையில் பெண் பிள்ளைகள் தங்குவதற்கான பிரத்யேக விடுதிகளால் பெற்றோர்களின் பாரம் பெருமளவு குறைந்தது. இதனால் கல்வி கற்றதோடுநிற்காமல் பெண் பிள்ளைகள் வேலைக்கு துணிந்து வரும் நிலை உருவாகியுள்ளது.

படிக்கும் பெண்களுக்கு உதவி, படித்த பின் வேலைக்கு செல்வதற்கு உதவி என்று மட்டும் இல்லாமல் மகளிர் உரிமைத் தொகை திட்டம் கொண்டு வந்தார் முதல்வர். வீட்டில் இல்லத்தரசிகளாக இருப்பவர்களின் உழைப்பு அங்கீகரிக்கப்படாமலேயே இதுவரை இருந்து வந்தது.




உலகில் எந்த நாட்டிலும் எந்த தலைவர்களும் சிந்தித்திராத திட்டம் இது. வீட்டு வேலைகளைச் செய்யும் இல்லத்தரசிகளின்உழைப்பை அங்கீகரித்து அவர்களுக்கு மாதம் ரூபாய் 1000 தரும் மகளிர் உரிமைத் தொகை திட்டத்தால் வேலைக்குச் செல்லாமல் வீட்டுப் பொறுப்பை மட்டும் கவனித்து வரும் பெண்களின் பொருளாதார நம்பிக்கை அதிகரித்துள்ளது.

**தமிழ்க்கேள்வி**
**தி.செந்தில்வேல்**
மூத்த
ஊடகவியலாளர்



இவற்றிற்கெல்லாம் மேலாக, பாபா சாகேப் அம்பேத்கர் சொன்னது போல், பொருளாதார உரிமை மட்டுமே உரிமை இல்லை பாலின சமத்துவம் உறுதி செய்யப்பட வேண்டும் என்றாரே அந்த வார்த்தைகளை உண்மையாக்கும் விதமாக, அனைத்து சாதியினரும் அர்ச்சகர் என்ற திட்டத்தால் அனைத்து சாதிகளிலும் உள்ள ஆண்கள் அர்ச்சகர்களாக வர முடியும்.

ஆனால், அனைத்து சாதிகளிலும் உள்ள பெண்களின் வழிபாட்டு உரிமையை யார் காப்பது ? ஆலயங்களில் ஆண்களைப் போலவே பெண்களும் வழிபாடு நடத்த வேண்டும் என்பதுதானே பாலின சமத்துவமாக இருக்க முடியும். அதை உறுதி செய்யும் வகையில் பெண் ஓதுவார்களை நியமித்தார் நம் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின். மிக மிக பாராட்டப்பட வேண்டிய திட்டம் இது.

இப்படி கல்வி, வேலைவாய்ப்பு, பொருளாதாரம், வழிபாட்டு உரிமை என்று ஒவ்வொன்றிலும் பெண்களுக்கான உரிமைகளை நிலைநிறுத்திய நம் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அதிகாரத்திலும் பெண்களுக்கு சம பங்கு கொடுத்து அழகு பார்த்தவர். உள்ளாட்சித் தேர்தல்களில் தமிழகத்தில் மொத்தமுள்ள 21 மாநாகராட்சிகளில் 11 மாநகராட்சியின் மேயர்களாக பெண்களை பதவியில் அமர்த்தி அதிகார பரவலாக்கலை உறுதிப்படுத்தியவர் நம் முதலமைச்சர் ஸ்டாலின்.

பெண்களுக்கான மகிழ்ச்சி என்பதோ அவர்களின் விடுதலை என்பதோ கல்வி, பொருளாதாரம், வேலைவாய்ப்பு என்பதை எல்லாம் தாண்டி அவர்களுக்கான சுயமரியாதையைத் தருவதில் தான் உள்ளது. அதைப் புரிந்து கொண்டதால் தான்முத்தமிழ் அறிஞர் கலைஞர் விதவை என்ற வார்த்தைக்கு மாற்றாக கைம்பெண் என்ற வார்த்தையைத் தந்தார். திருநங்கை, திருநம்பி என்ற சொல்லாடல்களைத் தந்தார். ஊனமுற்றோர் என்ற வார்த்தைக்குப் பதிலாக மாற்றுத் திறனாளி என்ற சொல்லைத் தந்தார்.

அவரின் வழியில் ஆட்சி நடத்திக் கொண்டிருக்கும் நம் முதல்வர் பெண்கள் மட்டுமின்றி திருநர் வாழ்விலும் ஏற்றங்கள் பெற அவர்களின் உயர்கல்விகான செலவை அரசே ஏற்கும் என்று அறிவித்துள்ளார்.



சமீபத்தில் வந்த அறிக்கை ஒன்று குஜராத்தில் தினமும் சராசரியாக 6 பெண்கள் பாலியல் வல்லுறவு கொடுமைகளுக்கு ஆளாகிறார்கள் என்ற அதிர்ச்சியைத் தந்தது. மற்றொரு அறிக்கை திராவிட மாடல் அரசின் மகத்தான திட்டங்களால் இந்தியாவிலேயே மிக அதிகமாக முனைவர் பட்டப்படிப்பிற்கு விண்ணப்பிக்கும் பெண்கள் அதிகமுள்ள மாநிலமாக தமிழ்நாடு திகழ்வதாகச் சொன்னது.

பெண்களை பாதுகாக்கத் தவறும் மோடி மாடலை புறக்கணித்து, பெண்களின் வாழ்வில் ஏற்றங்களைத் தரும் மு.க.ஸ்டாலினின் திராவிட மாடலை வலுப்படுத்துவோம் என்று இந்த சர்வதேச மகளிர் தினத்தில் சூளுரைப்போம்..!

**(தொடரும்...)**



புதுக்கோட்டை மாட்சிமை தங்கிய மன்னர் கல்லூரியில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் சார்பில், பயனாளிகளுக்கு விலையில்லா வீட்டுமனைப் பட்டாவிற்கான ஆணைகளை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஐ.சா.மெர்சி ரம்யா தலைமையில் 07.03.2024 வழங்கினார். உடன் புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மரு.வை.முத்துராஜா, மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.மா.செல்வி, புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் செல்வி.பா.ஐஸ்வர்யா, நகர்மன்றத் தலைவர் திருமதி.திலகவதி செந்தில், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.




தஞ்சாவூர் மாவட்டம் பட்டுக்கோட்டை ஊராட்சி ஒன்றியம் ஆலடிக்குமுளை ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் "நீங்கள் நலமா " திட்டத்தின் கீழ் தொலைபேசி வாயிலாக திட்டங்கள் குறித்து பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பொதுமக்களிடம் கேட்டறிந்தார். பள்ளிக் கல்வித் துறை இயக்குநர்கள் அறிவொளி, கண்ணப்பன், மாவட்ட வருவாய் அலுவலர் தெ.தியாகராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் துரை.சந்திரசேகரன் (திருவையாறு), கா.அண்ணாதுரை (பட்டுக்கோட்டை), மாவட்ட ஊராட்சித் தலைவர் உஷா புண்ணிய மூர்த்தி மற்றும் பலர் உடனிருந்தனர்.